

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.1.2026) பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி இரண்டு புதிய அறிவிப்புகளை வெளியிட்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.1.2026) பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, ஆ. வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நல்லி குப்புசாமி பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளான 15.1.2026 அன்று சென்னை நேதாஜி சாலை, நாராயணப்ப தெருவில் சாலையோரம் வசிக்கும் மக்களை சந்தித்து, அவர்களின் தேவைகளை கேட்டறிந்தபோது, அங்கு வசித்துவரும் துரை–சுமதி தம்பதியரின் ஆண் குழந்தைக்கு ”வெற்றி என்று பெயர் சூட்டினார். உடன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

## இன்று நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*காஞ்சிபுரம், ஜன.18*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (18.1.2026-ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு, காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ. எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுபோது ஜனவரி 25 அன்று காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட இருக்கிறது.

எனவே இக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர-நகர-ஒன்றிய-பகுதி-பேரூர் செயலாளர்கள்-கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.அறிக்கையில் அறிவித்துள்ளார்.



சேலம் மண்டல அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. சார்பில் ஜான்சன்பேட்டை டெப்போ அருகில் திராவிட பொங்கல் விழா மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாவட்ட பொருளாளர் மு.கார்த்திகேயன், மாநகர செயலாளர் பா.ரகுபதி, சேலம் மண்டல மத்திய சங்க தலைவர் கே.ஸ்ரீதர், பொதுச் செயலாளர். ஜி.மனோகரன், பொருளாளர் கே.டி.முருகன் மற்றும் நிர்வாகிகள் கே.காமராஜ், ஆர்.அசோகன், முகம்மது இஸ்மாயில், வி.சின்னதுரை, ஆர்.ரவிக்குமார், ஜி.பெருமாள், கே.ஜோதி பிரபாகரன், டி.சிவக்குமார், ஆர்.ஸ்ரீதர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# நவீன வசதிகளுடன் 776 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாகம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, ஜன.18-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (17.1.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தின் முன்னேற்றப் பணிகளையும் மற்றும் திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தி ன்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் இறுதி கட்டப் பணிகளையும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 21.01.2026 அன்று திறக்கப்படவுள்ள சென்னை, ஏழுகிணறு, ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகிலுள்ள பழைய சிறைச்சாலை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று (17.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதுகுறித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

தமிழக முதல்வர் அவர்கள் சிந்தையில் உதித்த திட்டமான வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் பல்வேறு பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு பணிகள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பேருந்து நிலையங்கள், விளையாட்டு திடல்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றுடன், மக்களின் நிரந்தர வாழ்வாதாரமான குடியிருப்பு கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் அடிப்படை தேவையான மருத்துவ வசதிகளுக்காக, குறிப்பாக டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு) சிகிச்சைக்கு அதிக அளவு செலவிட வேண்டிய நிலை இருப்பதால், குறைந்த கட்டணத்தில், டோக்கன் விலையில், கொளத்தூரில் ஒரு டயாலிசிஸ் சென்டர் வெகுவிரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளது. இதனுடன், மூத்த குடிமக்களுக்கான 100 நபர்கள் தங்கக்கூடிய உண்டு உறைவிடப் பள்ளி (Senior Citizens Home) ஒன்றும் அமைக்கப்படுகிறது. அதேபோல், வடசென்னை பகுதியில் தற்போது குறைவாக உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவையை உணர்ந்து, கொளத்தூர், பூம்புகார் நகரில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுமான பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மக்களின் தேவைகளை உணர்ந்து, பல்வேறு வகையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், தமிழக முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த திட்டத்தின் பலனை, இப்போது கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் அமைந்துள்ள டயாலிசிஸ் சென்டர் மூலம் மக்கள் பெற உள்ளார்கள். இந்த டயாலிசிஸ் சென்டரை அடுத்த பிப்ரவரி மாதம் 10ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான அடிப்படை பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் முத்தாய்ப்பு திட்டமாக, “முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” என்ற பெயரில், ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 776 குடியிருப்புகள் கொண்ட ஒரு குடியிருப்பு வளாகம் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பும் 425 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

நேற்றும் முன்தினமும், சாலை ஓரங்களில் வசிக்கும் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்த முதல்வர் அவர்கள், அதேபோல் மூத்தோர் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதிகளையும் நேரில் ஆய்வு செய்தார்கள். சென்னையில் உள்ள 56 மூத்தோர் குடியிருப்பு இல்லங்களையும் ஒரே உத்தரவாக மேம்படுத்த உத்தரவிட்டுள்ளார்.



அங்கு வழங்கப்படும் ஒரு வேளை உணவுக்கான தொகை ரூ.30-ஆக இருந்ததை உயர்த்த உத்தரவிட்டதுடன், அங்கு பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க அறிவுறுத்தியுள்ளார். சாலை ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் வழங்கப்படும் என்ற உறுதியையும் அவர் அளித்துள்ளார்.

தற்போது ஸ்டான்லி நகர் மருத்துவமனை அருகில் கட்டப்பட்டு வரும் 776 குடியிருப்புகள் கொண்ட வளாகத்தில், மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கலையரங்கம், பொழுதுபோக்கு பூங்கா, நுகர்வோர் வாணிபக் கழகத்தின் ரேஷன் கடை, அங்கன்வாடி, சிறப்பான தோற்றத்துடன் கூடிய படைப்பகம், நூலகம், ஆண், பெண் என தனித்தனியாக உடற்பயிற்சி கூடங்கள், ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையிலேயே அல்ல, தமிழ்நாட்டிலேயே இதுவரை வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் எந்தக் கட்டுமானத்திலும் இல்லாத அளவிற்கு, மக்களின் அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முழுமையாக தமிழக முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்தது; அவரே வடிவமைத்த இந்த திட்டம், வரும் 21ஆம் தேதி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்கே நடைபெறும் பணிகளை மேலும்துரிதப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறை (Code of Conduct) அமலுக்கு வருவதற்கு முன்பாக, இந்த பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

தேர்தல் அறிவிப்பு முன்பாக அனைத்து பணிகளும் முடிக்கப்படுமா? என்ற செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அவர்களின் பதில்:

எவ்வளவு விரைந்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிக்க முயற்சி செய்து வருகிறோம். அதற்கான முயற்சிகளை தினந்தோறும் நானும், எங்கள் துறையின் செயலாளர் டாக்டர் மணிவாசகம், வீட்டு வசதி வாரியத்தின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, துறை உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், ஆணையாளர் ஸ்ரீதர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், ஆர்டிசி அதிகாரிகள் கௌஷிக் மற்றும் ரவி ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறோம்.

மாநகராட்சியின் தரப்பில் செய்ய வேண்டிய பணிகளுக்கு மேயர் திருமதி.பிரியா ராஜன் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். மண்டல குழு தலைவர், பகுதி செயலாளர், வட்டச் செயலாளர் உள்ளிட்ட இயக்கம் சார்ந்த அனைவரும் அரசுடன் இணைந்து இந்த பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், பி.ஸ்ரீராமுலு, மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் ராதாகிருஷ்ணன், சிஎம்டிஏ செயற்பொறியாளர் திருமதி.அமுதா, மாமன்ற உறுப்பினர் எ.நாகராஜன், மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற்பொறியாளர் சரவணன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப். முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மற்றும் துறைச் சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.